RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22433

# யாப்புறுப்புக்களின் மாற்றமும் வேறுபாடும்

இரா. சண்முகப்பிரியா [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620023, தமிழ்நாடு, இந்தியா

# The Change and Difference of the Prosody

R. Shanmugapriya [a, *]

[a] Department of Tamil, Thanthai Periyar Government Arts and Science College (Autonomous), Tiruchirappalli-620023, Tamil Nadu, India

* Corresponding Author: rajaspriya2004@gmail.com

Received: 30-06-2022
Revised: 10-09-2022
Accepted: 02-10-2022
Published: 17-10-2022

Check for updates

## ABSTRACT

Prosody in Tamil has changed and developed from time to time. Prosody itself helps in the creation of traditional poems. Apart from creating traditional poems, prosody is also a tool for knowing the structure and meaning of songs composed on the basis of a tradition dating back to ancient times. It is prosody that lays down the rules for the style of the verse, which treats the subject matter of the book with sound and appearance. If the ideas expressed are in the style of a poem, then the prose has no use for the reciter. That is why, compared to prose, the style of the poem becomes superior. Since all our ancient texts are composed in the style of poetry, the practice of prosody is essential for our fullest experience of them. Tolkappiya poetry is an uncommon component of understanding the structure of ancient Tamil poetry. The former praised the prosodic features and developed them from time to time. The Tholkappiyar was also well-versed in the prosodic system that existed before him. He praises the creators of prosody that existed before him as 'Yaappari Pulavar (Poets who know Prosody)'. Tolkappiyam is the first book we have today to expound the Prosody. After Tholkappiyam, books such as Kakkaipaadiniyam, Avinayam, Yaapparungalam, Yaapparungalakaarikai, Veerachozhiyam, Muthuveeriyam, Palkaayam, etc., have appeared to describe prosody. It is natural that from time to time the emergence of new types of prosody and changes in old prosodic types occur. Therefore, the prosody explained by other poets' texts differs in some respects from the grammatical trend of Tholkappiyar. This article is based on how Tolkappiyar's opinion about prosodic parts in the grammar of prosody has been changed or different in the prosodic texts that appeared after him.

**Keywords:** Yaapu, Asai, Seer, Thalai, Adi, Thodai

## முன்னுரை

உயிரிற்கு உடல் போன்றது கருத்திற்குச் செய்யுள், உடல், உயிர் இரண்டில் உயர்ந்தது உயிரேயாயினும் அதைத் தாங்கும் உடலின் வனப்பினால் உயிரின் பொலிவு சிறப்புறுதல் வெளிப்படை. எனவே, உரைநடையினும் செய்யுள் நடை உயர்ந்ததே. எனவேதான், நமது முன்னையோர் நூல்களைச் செய்யுள் நடையில் நமக்கு உதவினர் (Rajagopalachariyar, 1982). தமிழரது ஆதி இலக்கண நூலான தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்னும் ஓர் இயலில் செய்யுளமைப்பு விதிகள் விரிவாகக் கூறப்பட்டிருப்பதே யாப்பிலக்கணப் பயிற்சியின் அவசியத்திற்குப் போதிய சான்றாகும்.

எனினும் பிற்காலத்தில் பெருவழக்காய் வழங்கி வந்த பாவினங்களுக்கு அதில் விதி கூறப்படாமையால், பல புலவர்கள் பல யாப்பிலக்கண நூல்களை இயற்றித் தந்தனர்.

தமிழ் இலக்கண உலகில் யாப்பியல் என்பது தனித்த நோக்குக்கும் விரிந்த ஆய்வுக்கும் களமாக அமைந்து விளங்கும் பிரிவு. யாப்பியல் தெளிவு பெற வேண்டிய அடிப்படைக் கருத்துக்கள் பல உள (Jeyaraman, 1980). தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே யாப்பியல் பற்றிய ஆராச்சியும் சிந்தனைகளும் வளர்ந்து வந்துள்ளன. யாப்பிலக்கணத் துறையில் தோன்றிய புதிய கருத்துக்களுக்கு முதன்மை கொடுத்துக் காலந்தோறும் எழுந்த யாப்பிலக்கண நூல்களில் விதிகள் வகுக்கப்பெற்று வந்துள்ளன. யாப்பிலக்கணிகளான நூலாசிரியர்கள் கூறாமல் விட்ட சில புதிய கருத்துக்களை உரையாசிரியர்கள் தம் உரைகளில் சுட்டிக்காட்டுகின்றனர். உரையாசிரியர்கள் ஒருவர் மற்றவரைத் தழுவிச் செல்லும் வகையிலும் மறுத்துரைக்கும் முறையிலும் சில புதிய எண்ணங்களையும் கூறியுள்ளனர். இவ்வகையில் தொல்காப்பியம் கூறுகின்ற யாப்புறுப்புக்கள் பற்றிய கருத்துக்கள் தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த யாப்பிலக்கண நூல்களான காக்கைபாடினியம், பல்காயம், அவிநயம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், முத்துவீரியம் முதலானவற்றில் எங்ஙனம் புதிதாகக் கூறப்பட்டுள்ளது அல்லது வேறுபட்டுள்ளது என்னும் பொது நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## யாப்பு உறுப்புகள்

'யாப்பு' என்பதன் வரையறையைத் தொல்காப்பியம்,

"எழுத்து முதலா ஈண்டிய அடியிற்

குறித்த பொருளை முடிய நாட்டல்

யாப்பென மொழிப யாப்பறி புலவர்"

என்று குறிப்பிடுகின்றது (Ilampuranar, 2001). யாப்பருங்கலம்,

"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு

இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே"

என்று குறிப்பிடுகின்றது (Manikandan, 2005). தொல்காப்பியம் கூறுவது வடிவத்தோடு பொருண்மையும் இணைத்து நோக்குவதாகும். யாப்பருங்கலம் குறிப்பிடுவது வடிவத்தையே முதன்மைப்படுத்துவதாகும். செய்யுள்களின் புறவடிவ இலக்கணமே யாப்பு எனும் வரையறை தொல்காப்பியத்திற்குப் பின்னர் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளது.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா எனும் இவ்வேழு உறுப்புகளால் அமைவது செய்யுள் ஆகும். இவ்வேழு உறுப்புகளைக் கூறுகின்றபொழுது யாப்புறுப்புகள் என்றும், இவற்றுள் பா தவிர எஞ்சிய ஆறு உறுப்புகளைக் கூறுகின்றபொழுது செய்யுள் அல்லது பாவின உறுப்புக்கள் என்றும் கூறப்படுகின்றது.

தொல்காப்பியத்துள் யாப்பு உறுப்புகளைத் தொகுத்துக் கூறும் செய்யுளியல் முதல் நூற்பாவில் யாப்பு, பா போன்றவற்றையும் செய்யுள் உறுப்புக்களாக உரைக்கப்படுவதால் இவ்விரண்டினையும் உள்ளடக்கியதாகவும் செய்யுள் கருதப்பட்டுள்ளது. எனினும் தொல்காப்பியத்தில் யாப்பு என்ற சொல் 'செய்யுள் 'என்ற பொருளிலும் வழங்கப்பட்டுள்ளது.

"அஃதன் றென்ப வெண்பா யாப்பே"

யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர், செய்யுள் என்பவை ஒரு பொருள் குறித்த பல சொற்கள் ஆகும். எனவேதான் செய்யுள் இலக்கணம் யாப்பிலக்கணம் என்று அழைக்கப்படுகின்றது (Ilampuranar, 2001).

## தொல்காப்பியம் கூறும் யாப்பு உறுப்புகள்

தமிழில் தோன்றியுள்ள இலக்கிய வடிவங்களை எல்லாம் செய்யுள் என்ற பெயரினால் வழங்குதல் தொல்காப்பியர் காலத்து மரபாகும். செய்யுளின் ஒருவகையாகவே உரை கருதப்பெற்றது. பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்று ஏழுவகையாக யாப்பினைப் பாகுபடுத்துதல் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது. தனிமொழி, தொடர்மொழி எனச் சொற்களைப் பாகுபடுத்திக் கூறுதல் போலத் தனிநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் எனச் செய்யுள்களைப் பாகுபடுத்திக் கூறும் மரபும் தோன்றியுள்ளது. செய்யுள் உருப்பெறுதற்கு இன்றியமையாது வேண்டப்படும் உறுப்புக்கள் பற்றிய சிந்தனையும் எழுந்துள்ளது. தொல்காப்பியர் தம் காலத்தில் நிலவிய உறுப்புக் கொள்கையினைச் செய்யுளியல் முதல் நூற்பாவில் தொகுத்துக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர், செய்யுள் உறுப்புகளின் எண்ணிக்கையை முப்பத்து நான்கு என்று குறிப்பிடுகின்றார்.

“மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ

யாத்த சீரே அடியாப் பெனாஅ

மரபே தூக்கே தொடைவகை எனாஅ

நோக்கே பாவே அளவியல் எனாஅ

திணையே கைகோள் பொருள்வகை எனாஅ

கேட்போர் களனே காலவகை எனாஅ

பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ

முன்னம் பொருளே துறைவகை எனாஅ

மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்

ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்”

என்று மாத்திரை முதல் வண்ணம் ஈறாகக் கூறப்பட்ட இருபத்தாறு உறுப்புகளை ஒரு கூறாகவும் (Ilampuranar, 2001).

“அம்மை அழகு தொன்மை தோலே

விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்

பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ”

எனப் பின்னுளள எட்டினை மற்றொரு கூறாகவும் தொல்காப்பியர் கூறியுள்ளதை நோக்க, இருகூறுகளுக்கும் இடையே ஒருவகையில் வேறுபாடு சுட்டுவது தொல்காப்பியரின் கருத்தாகக் கொள்ளப்படுகிறது (Ilampuranar, 2001).

‘பிற்கூறிய எட்டும் மேற்கூறிய இருபத்தாறினோடும் ஒரு நிகரன அன்மையின், வேறுதொகை கொடுக்கப்பட்டது’ என இவ்விரு கூறுகளிடையமைந்த வேறுபாட்டை இளம்பூரணர் நுட்பமாகச் சுட்டுகின்றார் (Ilampuranar, 2001).

‘ஆறுதலையிட்ட அந்நாலைந்து’ மெனவும் ‘எட்டென’ வும் இருவகையால் தோன்றக் கூறியது, ஏனைய போலாமல் எட்டுறுப்பும் ஓரோர் செய்யுட்கு ஒரோவொன்றேயும் வருமென்பதறிவித்தற்கும் அவைதாம் அச்செய்யுள் பல தொடர்ந்த வழியே பெரும்பான்மையும் உறுப்பாமென்ப தறிவித்தற்கும் என்க. எனவே ஒழிந்த உறுப்பிருபத்தாறும் நன்றொன்றி என இன்றியமைவென்பது பெற்றாம்’ எனப் பேராசிரியர் இவ்வுறுப்புக்கள் இரு கூறாக அமைந்தமைக்கு விளக்கம் கூறுகின்றார். மேலும் ‘இவை யாப்பிற்கு இன்றியமையாத இலக்கணப் பகுதியென விதந்தோதவே, இனிக்கூறும் உறுப்பெட்டும் இன்றியமையாமையில்லை என்றவாறு’ என்றும் பேராசிரியர் விளக்குகின்றார் (Kanaga Sabapathi, 1935).

'முற்கூறிய இருபத்தாறும் தனிநிலைச் செய்யுட்கு இன்றியமையாதவை என்றும் பிற்கூறிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்குப் பெரும்பான்மையும் உறுப்பாய் வரும் என்றும் இவற்றைத் தனிநிலைச் செய்யுட்குரியவை, தொடர்நிலைச் செய்யுட்குரியவை எனப் பெயர் கூறி வேறுபடுத்தி உரைப்பர் நச்சினார்க்கினியர் (Ganeshaiyar, 2007). பேராசிரியர் நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைவிளக்கத்தால் முதற்கூறிய இருபத்தாறு உறுப்புகள் தனிநிலைச் செய்யுட்கு இன்றியமையா உறுப்புகள் என்றும் பின்னுள்ள எட்டும் தொடர்நிலைச் செய்யுட்களில் ஒவ்வொன்றாகப் பயின்று வரும் என்றும் தனிநிலைச் செய்யுட்களுக்குப் பின்னுள்ள எட்டு உறுப்புக்கள் இன்றியமையாதவை அல்ல என்றும் அறியலாம். இவ்வேறுபாட்டினை இளம்பூரணர் விளக்கமாகக் கூறவில்லை. உரையாசிரியர்களின் விளக்கங்களை நோக்க, தொல்காப்பியர் தம்காலச் செய்யுட்களைத் தனிநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் என இருகூறாகக் கொண்டார் என்பதும், தனிநிலைச் செய்யுட்களுக்கு இருபத்தாறு உறுப்புக்கள் அவரால் சுட்டப்பட்டுள்ளன என்பதும் தொடர்நிலைச் செய்யுட்கண் பயின்று வருவன எண்வகை உறுப்புக்கள் என்பதும் அவர்தம் கருத்தால் பெறப்படுகின்றது.

தொல்காப்பியர் கூறிய எண்வகை வனப்புக்கள் எண்வகை இலக்கிய வகைகளைச் சுட்டுவன என்று கொள்ளவே, மாத்திரை முதலாக வண்ணம் ஈறாகச் சுட்டப்பட்ட இருபத்தாறே செய்யுளின் உறுப்புக்களாகத் தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளன என்பது அறியத்தக்கது (Jeyaraman, 1980). தொல்காப்பியர் வகுத்துக் கூறிய செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கினையும் (1) அடிப்படை உறுப்புக்கள் (2) பொருள் புலப்பாட்டு உறுப்புக்கள் (3) வனப்புக்கள் என்ற மூன்று தொகுதியாகப் பகுத்துக் கூறலாம். அவர்க்குப் பின்னர் விளங்கிய யாப்பிலக்கண நூலார், அவர் கூறிய அடிப்படை உறுப்புக்களைச் சிறிது மாற்றத்துடன் ஏற்றுக் கொண்டார் என்பது நோக்கத்தக்கது (Kanthasamy, 2017).

தொல்காப்பியச் செய்யுளியலின் முதல் நூற்பாவை நோக்கினால், முதல் சில அடிகளிலுள்ளன, பிற்கால யாப்பிலக்கணத்தின் உறுப்பியலிலும் பா, அளவு போன்ற அடுத்த அடுக்கிலமைவன, அவற்றின் பாவியல் அல்லது செய்யுளியலாகவும், இடைப்பகுதியிலமையும் திணை முதலிய பன்னிரண்டும் அகப்பாட்டுறுப்பாகி அக இலக்கணப் பகுதியாகவும் இறுதி அடிகளில் சுட்டப்படும் வண்ணம், வனப்பு எனும் சில ஒழிபாகவும் ஒருவித அடுக்கு நிலையில் பிரிந்து சென்றுள்ளதை உணரலாம் என்பவை பிற்கால யாப்பியல் ஆராச்சியாளர்களின் யாப்புறுப்புக்கள் குறித்த கருத்துக்கள் ஆகும் (Anni Thamasu, 2016).

## யாப்பிலக்கணக் கொள்கைகள்

தொல்காப்பியர் காலத்தில் தொல்காப்பியரின் யாப்பியல் இலக்கணங்கள் ஒரு கொள்கையாகவும், காக்கை பாடினியாரின் யாப்பியல் இலக்கணங்கள் பிறிதொரு கொள்கையாகவும் வழங்கி வந்துள்ளன. காக்கை பாடினியாரின் யாப்பியல் கொள்கைகள் பிற்காலத்தில் பல்வேறு யாப்பியலாரால் பெரிதும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. நற்றத்தனார் போன்ற யாப்பிலக்கணிகள் இவ்விரு கொள்கையினின்றும் வேறுபட்டுப் புதியதொரு கொள்கையையும் வகுத்தனர். இங்ஙனம் யாப்பியல் வரலாற்றில் மூன்றுவேறு கொள்கைகள் கிளைத்தெழுந்து வளர்ந்து வந்துள்ள பான்மையினை யாப்பியல் நூல்களின் அமைப்பால் அறிய முடிகின்றது என்பது யாப்பியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும்.

## தொல்காப்பியத்திற்குப் பின்வந்த யாப்பியல் நூல்களில் உறுப்புக்கள்

தொல்காப்பியரின் ஒருசாலை மாணவர் என உரையாசிரியரால் கூறப்படுகின்ற காக்கைபாடினியார் செய்யுள் உறுப்புகளின் எண்ணிக்கையைத் தொகுத்துக் கூறுகின்ற நூற்பா கிட்டவில்லை. எனினும் யாப்பருங்கல விருத்தியின் துணை கொண்டு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என வரும் ஏழும் காக்கைபாடினியாரால் யாப்புறுப்புக்களாகக் கூறப்படுகின்றது.

"எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு

இழுக்கா நடைய தியாப்பெனப் படுமே”

என்று யாப்பருங்கலத்தாரும் (Manikandan, 2005),

“எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோடு

இழுக்கா மரபின் இவற்றொடு பிறவும்

ஒழுக்கல் வேண்டும் உணர்ந்திசி னோரே”

என்று பல்காயனாரும், அவிநயனாரும் யாப்புறுப்புக்களை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என ஏழாகக் கொள்ளும் முறையிலேயே கூறுகின்றனர் (Manikandan, 2005). யாப்பருங்கலக்காரிகையின் முதல் நூற்பாவில் தூக்கு எனும் உறுப்பினைத் தவிர ஏனைய ஆறு உறுப்புக்களும் யாப்பு உறுப்புக்களாக உரைக்கப்பெற்றன.

செய்யுள் இலக்கணம் பற்றிய பல்வேறு கருத்துக்களில் வீரசோழியம், தனித்துக் காணப்படுகிறது. இந்நூலின் யாப்புப் படலத்தில் செய்யுளுக்குரிய யாப்பு உறுப்புக்களைக் கொண்டார் என்பதை அறிந்து கொள்வதற்கு இயலவில்லை. எனினும் அசை, சீர், அடி, தொடை ஆகிய உறுப்புக்களைப் பற்றிய கருத்துக்களைத் தம் காரிகை நூற்பாக்களில் குறித்துள்ளார்.

வீரசோழியம் வடநூல் தழுவி எழுந்த யாப்பு நூலாதலால் எழுத்து, தளை ஆகியன யாப்புறுப்புக்களாகக் கொள்ளப்படாது விடப்பட்டன போலும், வீரசோழியத்திற்குப் பின் முத்து வீரியத்தார் தளை என்பதை உறுப்பாகக் கொண்டு எழுத்தையே விடுத்தார் எனக் காண்கிறோம். இங்ஙனம் உறுப்புக்களின் எண்ணிக்கை பற்றிய கொள்கை, காலந்தோறும் சூழலுக்கேற்பவும் வேறுபட்டு அமைந்தது என அறியலாம் (Jeyaraman, 1980). முத்துவீரியம் அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்னும் ஆறு உறுப்புகளை யாப்புறுப்புக்களாகக் குறிப்பிடுகின்றது.

நற்றத்தனார் தொடை, அடி, பா என்ற மூன்றினை மட்டும் யாப்புறுப்புக்களாகக் கொண்ட கொள்கைக்கு மூலவர் யார் என்பது அறிய இயலாவிடினும் அவர்தம் கொள்கை அதுவே என்பதை,

“யாப்பெனப் படுவ தியாதென வினவின்

தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்

நோக்கிற் றென்ப நுணங்கி யோரே”

எனவரும் நூற்பாவால் அறியலாம். யாப்புறுப்புக்கள் மூன்றே எனும் இவர்தம் கொள்கைக்கு மூலவர் வேறு ஒருவராகவும் இருக்கலாம் என்பதற்கு ‘நுணங்கியோரே’ எனவரும் தொடரே சான்றாக உள்ளது. ‘செய்யுளின் உறுப்புக்களில் மிகவும் அடிப்படையாக உள்ள, எழுத்து, அசை, சீர், தளை என்பனவற்றை இவர் கூறாது விட்டமைக்கு உரிய காரணம் புலப்படவில்லை, ஒருவேளை எழுத்து, அசை, சீர் ஆகிய மூன்றும் ஓசையினைத் (தூக்கு) தீர்மானித்தலின், தூக்கினைக் கூறினாலே போதும் என்று எண்ணியிருத்தல் வேண்டும் என்று அவர்கள், நற்றத்தனார் எழுத்து, அசை, சீர், தளை போன்ற உறுப்புக்களைக் கூறாது விட்டமைக்கான காரணமாகக் குறிப்பிடுகின்றார் (Kanthasamy, 2017).

## எண்ணிக்கை வேறுபடுவதற்கான காரணம்

செய்யுள், யாப்பு, பா ஆகியனவற்றை வேறுவேறு பொருளுடையவையாகத் தொல்காப்பியர் கூறுவது, இவர் கூறும் செய்யுள் உறுப்புக்களின் எண்ணிக்கையிலிருந்து வேறுபடுகின்றது. தொல்காப்பியருக்கும் பிற யாப்பிலக்கணிகளுக்கும் இடையே யாப்பு உறுப்புக்களின் எண்ணிக்கை வேறுபாடு மிகுதியாக அமைவதற்கு இதுவும் அடிப்படைக் காரணம் ஆகும். செய்யுள் செய்யும் கவிஞனுக்கும் செய்யுளுக்கும் இயல்பாக அமையவேண்டிய பலவற்றையும் உறுப்புக்களாகக் கூறுவதனால், தொல்காப்பியத்தில் செய்யுள் உறுப்புக்களின் எண்ணிக்கை மிகுதிப்பட்டுள்ளது. தொல்காப்பியர் அல்லாத பிற யாப்பிலக்கணிகள் செய்யுள், பா ஆகியவற்றை ஒரு பொருட் சொற்களாகவும், இவற்றின் இயல்பு, இலக்கணம் ஆகியவற்றை உரைப்பது யாப்பு என்றும் கொண்டனர்

இதன் காரணமாகவே யாப்புறுப்புக்களின் எண்ணிக்கை பற்றிய கொள்கை காலந்தோறும் வேறுபட்டு அமைந்து வந்துள்ளது.

யாப்பு உறுப்புக்களின் எண்ணிக்கை பலவாறாகக் கொள்ளப்பட்டாலும் அதனை ஏழு என்று கூறுவதே பொருந்தும் என்ற கொள்கை சான்றுகளின் துணையோடு வலியுறுத்தப்பட்டதையும் காண்கின்றோம்.

"நாதன் முதலாக நல்லுறுப் பேழியைந்

தேதமில் தன்மை இயலரசாம் - தாதுக்கள்

ஏழும் புணர்ந்த தியாக்கை எழுத்தாதி

ஏழும் புணர்ந்த தியாப்பு"

என வருகின்ற வெண்பா இக்கூற்றை உணர்த்துகின்றது (Kanthasamy, 2017). அரசன் முதலாக ஏழு அரசியல் உறுப்புக்கள், இரதம், உதிரம், எழும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் என்ற ஏழும் யாக்கையின் உறுப்புக்கள், அதுபோல எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்ற ஏழும் யாப்பின் உறுப்புக்கள் என இப்பாடல் உணர்த்துகின்றது. ஏழு வகைகளாக இங்குக் கூறப்படும் யாப்பு உறுப்புக்கள் அனைத்தும் காரணக் குறியால் பெயர் பெற்றவை என்பதனை,

"எழுதப்படுதலின் எழுத்தே அவ்வெழுத்து

அசைத்திசை கோடலின் அசையே அசையியைந்து

சீர்கொள நிற்றலிற் சீரே சீரிரண்டு

தட்டு நிற்றலிற் றளையே, அத்தளை

அடுத்து நடத்தலின் அடியே அடியிரண்டு

தொடுத்தல் முதலாயின தொடையே அத்தொடை

தூக்கில் தொடர்ந் திசைத்தலின் தூக்கெனப்படுமே"

எனவரும் பழம்பாடல் யாப்புறுப்புக்களின் பெயர்க் காரணங்களை விவரிவாக விளக்குகின்றது (Kanthasamy, 2017).

## முடிவுரை

தொல்காப்பியம் யாப்புறுப்புக்களாக முப்பத்து நான்கு உறுப்புக்களைக் கூறுகின்றது. பொருண்மை சார்ந்த கூறுகளையும் உறுப்புக்களாகக் கூறும் தொல்காப்பிய நெறி பின்னர்த் தொடர்ச்சி பெறவில்லை. பல்காயம், யாப்புறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என ஏழு உறுப்புக்களைக் குறிப்பிட, அக்கருத்தே பின்னைய யாப்பிலக்கண நூல்களால் வழிமொழியப்பட்டு வந்துள்ளன. இந்த ஏழு உறுப்புக்களுள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறு உறுப்புக்களை யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் யாப்புறுப்புக்களாகத் தனியே தெளிவாக வரையறுத்துத் தத்தம் உறுப்பியல்களில் விளக்கியுள்ளன. தொல்காப்பியம் முதல் உறுப்பாகக் கூறிய 'மாத்திரை' என்பது பின்வந்த யாப்பிலக்கண நூல்களில் உறுப்பாக இடம்பெறாமையும் தொல்காப்பியம் உறுப்பாகக் கூறாத 'தளை' என்பது பின்வந்த யாப்பிலக்கண நூல்களில் உறுப்பாக இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு யாப்புறுப்புக்களின் எண்ணிக்கை பற்றிய கொள்கை காலந்தோறும் சூழலுக்கேற்ப மாற்றம் பெற்று வந்துள்ளது.

## References

Anni Thamasu, (2016) Seyyuliyal, Amutha Nilayam, Chennai, India.

Ganeshaiyar, (2007) Tholkappiyam Porulathikaram, Ulaga Tamilaraichi Niruvanam, Chennai, India.

Ilampuranar, (2001) Tholkappiyam Porulathigaram, Kazhaga veliyeedu, Chennai, India.

Jeyaraman, N.V. (1980) Yappiyal Aaivukkovai, 12, Appathuraiyar theru, Thenampettai, Chennai, India.

Kanagasabapathi, (1935) Tholkappiyam Porulathikaram, Sathu Achchu kudam, India.

Kanthasamy, S.N. (2017) Tamil Yappiyalin thotramum valarchiyum, Muthal Pagam, Muthal Thoguthi, Tamil University, Thanjavur, India.

Manikandan, Y. (2005) Thanjavur Magaraja Sarabojiyin Sarasuvathi Mahal Noolagam, Thanjavur, India.

Rajagopalachariyar, K. (1982) Ilakkana Vilakkam yappiyal, Star Prasuram, 72, periya theru, Thiruvallikkeni, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License